27th July 1957]

SRI P. S. SANTHANAM : வட ஆர்காடு ஜில்லாவில் திருவண்ணாமலை, செங்கம் போன்ற தாலூகாகளிலுள்ளவர்களுக்கு இந்த மெஷின்கள் ஏன் கொடுக்கப்படவில்லை ? இதற்கு காரணம் அங்குள்ள மக்களுக்கு இதைப் பற்றி தெரிவிக்காததினாலா அல்லது தெரிந்தும் கொடுக்கப்படாமல் இருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : யார் யார் மனு செய்திருந்தார்களோ அவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. அந்த தாலூகாவிலிருந்து யாரும் மனு போட்டிருக்கமாட்டார்கள்.

SRI S. B. ADITYAN : இந்த தையல் மெஷின் ஹரிஜனங்களுக்கு கொடுக்கவேண்டுமென்ற திட்டம், இப்பொழுது அதிகமாக பின் தங்கிய வகுப்பினர் என்று பிரிக்கப்பட்டவர்களுக்கும் இந்த திட்டம் விஸ்தரிக்கப் பட்டிருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : இதற்கு தனி கேள்வி வேண்டும்.

Elementary School Teachers' Union.

* 291 *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any representations were made by the Elementary School Teachers' Unions in the State regarding their pay and conditions of service ; and

(*b*) if so, the demands made by all such unions in common ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) The demands are generally for revising the scales of pay and for improving the service conditions.

SRI S. PAKKIRISAMI PILLAI : இப்போது ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுப்பதில்லை. அதை கொடுக்கும்படி ஏற்பாடு செய்வதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது ஒரு திட்டமும் இல்லை.

SRI K. ANBAZHAGAN: தலைவர் அவர்களே, சென்னை நகராண்மைக் கழகத்தின்கீழ் பணிபுரிந்து வரும் ஆசிரியர்கள் ஆறு, ஏழு ஆண்டு காலமாக பணிபுரிந்தும் இதுவரை அவர்கள் உறுதி (கன்பர்மேஷன்) செய்யப்படாமல் இருக்கிறார்கள். மேலும் அவர்களுக்கு 60 வயது வரை வேலை செய்யலாம் என்று தரப்பட்டுள்ளதும் இதுவரை உறுதி செய்யப்படாமல் இருந்து வருகிறது. ஆகவே இவற்றை உறுதி செய்ய அரசாங்கம் உடனடியாக முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்கு தனி கேள்வி போட வேண்டும்.

SRI A. A. RASHEED : What is the view of the Government c their demands? The Minister said that they had made certain demands.

THE HON. SRI C. SUBRAMANIAM : We have as a matter of fact given them some increase in emoluments. We have given them further facilities also in certain other things. All these are well known. I may tell the hon. Member that the teachers are quite satisfied with the facilities already given to them by the Government.

Sri P. S. CHINNADURAI : இந்த ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் சம்பளம் மிக குறைவாக இருக்கிற காரணத்தினுல் அவர்களுக்கு ஆயுள் இன்ஷுரன்ஸ் பாலிஸிகள் ஏற்படுத்திக் கொடுத்து அதற்குரிய ப்ரீமியத் தொகையை இந்த ராஜ்ய சர்க்காரிலிருந்தே கட்டுவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்பொழுது பல ஸ்கீம்கள் அவர்களுடைய நன்மைக்காக செய்யப்பட்டிருக்கிறது. சமீபத்தில் 12 ரூபாய் சம்பளம் உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், இன்னும் இதற்கு மேல் ஏதாவது எடுத்துக் கொள்வதை பொறுத்து இருந்துதான் யோசிக்க வேண்டியிருக்கிறது.

Sri K. SATTANATHA KARAYALAR : கன்யாகுமரி ஜில்லாவில் உள்ள ஆரம்ப ஆசிரியர்கள் ஏதாவது கோரிக்கைகள் சமர்பித்திருக்கிறார்களா ? அப்படியானுல் அது என்ன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : Notice, please.

Sri K. VINAYAKAM : While the elementary school teachers in the State are generally grateful to the Government for the concessions given to them recently, do the Government realise that their basic pay and grade are far below the minimum wages assured by the Minimum Wages Committee? Will the Government think of raising the basic pay of higher grade and secondary grade teachers?

The Hon. Sri C. SUBRAMANIAM : At present, there is no proposal to further increase their emoluments.

Sri K. RAMACHANDRAN : பன்னிரண்டு ரூபாய் உயர்வு கொடுத்தது, சம்பளத்திலா அல்லது பஞ்சப்படியிலா ? இதில் தனியார் மானேஜ்மெண்டு ஸ்கூல்களுக்கும் டிஸ்ட்ரிக்ட் போர்டு ஸ்கூல்களுக்கும் வித்தியாசம் இருக்கிறதா ? அப்படியானுல் அதை நிவர்த்திக்க சர்க்கார் வேண்டிய ஏற்பாடுகள் செய்யுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதற்கு முன்பு ஒரு தனிகேள்வி போட்டு எத்தனை டியர்னஸ் அலவன்ஸ், எத்தனை சம்பளத்தில் உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி சொல்லியிருக்கிறேன். தனிப்பட்டவர்கள் நடத்தும் பள்ளிக்கூடங்களுக்கும் ஜில்லா போர்டு பள்ளிக்கூடங்களுக்கும் வித்தியாசம் கிடையாது.

Sri A. GOVINDASAMY : புருஷன் மனைவி இருவரும் ஆசிரியர்களாய் இருந்தால் சில இடங்களில் வெவ்வேறு இடங்களில் பிரிப்பதின் காரணத்தினுல் குடும்பத்தொல்லையும் அதிகச் சிலவும் ஏற்படுகிறது. ஆகவே அந்தத் தொல்லைகளைத் தவிர்ப்பதற்கு ஒரே பள்ளியில் அவர்கள் வேலை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இந்தக் கேள்விக்கும் அதற்கும் சம்பந்தமில்லை.

Brook Bond Tea Company

* 292 *Q.*—Sri M. KALYANASUNDARAM (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have received any memorandum from the workers of the Brook Bond Tea Company, Coimbatore, during 1956 for deciding the bonus due to them from the company for the years 1954 and 1955; and if so the action taken on the same?